# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**STC. No. 292/2024**

**Deposition of LW1 examined as PW1** Dt. 27.10.2025

| | |
|---|---|
| Name | தமிழ்மாறன் |
| Father's/Husband's Name | பன்னீர்செல்வம் |
| Village | கொரநாடு |
| Taluk | மயிலாடுதுறை |
| Age | 41/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 27.10.2025

(Accused present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து தற்சமயம் வீட்டில் இருந்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 2023 ம் ஆண்டு ஒரு நாள் இரவு 9.30 மணியளவில் மயிலாடுதுறையில் ரயில் நிலையத்திற்கு வந்து இறங்கி சென்று கொண்டிருந்த போது அங்கு யாரோ சிலர் கூட்டமாக தகராறு செய்து கொண்டிருந்தார்கள். அங்கு சென்று வேடிக்கை பார்த்தபோது தள்ளுமுள்ளில் சிக்கி கீழே விழுந்து விட்டேன். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனையில் போலீசார் விசாரித்த போது சந்தேகத்தின் பேரில் ஆஜர் எதிரி மீது தவறுதலாக புகார் மனு கொடுத்து விட்டேன். சம்பவ இடத்தில், சம்பவ சமயத்தில் ஆஜர் எதிரியை நான் பார்க்கவில்லை. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

ஆஜரில் உள்ள எதிரியை எனக்கு தெரியாது. புகாரை யார் எழுதியது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எதிரியுடன் நான் சமாதானமாகிவிட்டேன் என்றால் சரிதான். அதில் உள்ள சங்கதி பற்றி எனக்கு தெரியாது. கடந்த 24.11.2023 ம் தேதி இரவு 9.20 மணியளவில் மயிலாடுதறையில் ரயிலில் இருந்து நான் இறங்கி சென்ற போது டிக்கெட் பரிசோதகர் ஆஜர் எதிரி டிக்கெட்டை காண்பிக்க சொல்லி என்னிடம் திமிராக பேசியதாகவும் ஏன் என்னிடம் அவ்வாறு பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு கையில் வைத்திருந்த

27-10-25

பேனால் இடது கண் புருவத்தில் குத்தினார் என்றும் பின் அவரை கடந்த சென்ற போது என்னை வழிமறித்து காது தலை மற்றும் விளா பகுதியில் தாக்கி கீழே தள்ளிவிட்டதாக போலீசார் விசாரணையிலும், புகார்மனுவிலும் நடவடிக்கை எடுக்க கூறிவிட்டு, தற்போது எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

27/10/23

நீதித்துறை நடுவர் எண்-11

மயிலாடுதுறை